

புதுக்கோட்டை மாவட்டம், விராலிமலை ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கூட்டரங்கில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் சார்பில் மேற்கொள்ளப்பட்டுவரும் பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகள் குறித்து, ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் இ.பெரியசாமி , சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் ஆகியோர் 15.05.2023 அன்று அலுவலர்களுடன் ஆய்வு மேற்கொண்டனர். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.கவிதா ராமு, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திருமதி. நா.கவிதப்பிரியா, விராலிமலை ஒன்றியக்குழுத் தலைவர் திருமதி.காமு.மு.பி.மணி, ஒன்றியக் குழு உறுப்பினர் மு.பி.ம.சத்தியசீலன், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் மற்றும் அலுவலர்கள் உள்ளனர்.



மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி மற்றும் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் செஞ்சி கே.எஸ். மஸ்தான் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் சி.பழனி, முண்டியம்பாக்கம் அரசு மருத்துவக்கல்லூரி மற்றும் மருத்துமனையில் கள்ளச்சாராயம் அருந்தி உடல்நிலை பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருபவர்களை நேற்று முன்தினம் (16.05.2023) நேரில் சந்தித்து, வழங்கப்படும் சிகிச்சை முறைகள் குறித்து மருத்துவர்களிடம் கேட்டறிந்தனர். உடன் விக்கிரவாண்டி சட்டமன்ற உறுப்பினர் நா.புகழேந்தி, விழுப்புரம் சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் இரா.இலட்சுமணன், மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் ம.ஜெயச்சந்திரன், முண்டியம்பாக்கம் அரசு மருத்துவக்கல்லூரி மற்றும் மருத்துவமனை முதல்வர் மரு.கீதாஞ்சலி, இணை இயக்குநர் (மருத்துவபணிகள்) மரு.லட்சுமணன் உட்பட பலர் உள்ளனர்.

### கள்ளச்சாராயம் அருந்தி பாதிக்கப்பட்டு

# முண்டியம்பாக்கம் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெறுவோரிடம் நலம் விசாரிப்பு!

## அமைச்சர்கள் மா.சுப்பிரமணியன் - க.பொன்முடி - செஞ்சி மஸ்தான் நேரில் சென்று கேட்டறிந்தனர்!

விழுப்புரம், மே 18- மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் க. பொன்முடி மற்றும் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் செஞ்சி கே.எஸ்.மஸ்தான் ஆகியோர் முண்டியம்பாக்கம் அரசு மருத்துவக்கல்லூரி மற்றும் மருத்துவமனையில் கள்ளச்சாராயம் அருந்தி உடல்நிலை பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருபவர்களை நேரில் சந்தித்து, வழங்கப்படும் சிகிச்சை முறைகள் குறித்து மருத்துவர்களிடம் கேட்டறிந்தனர்.

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அவர்கள் தெரிவிக்கையில், விழுப்புரம் மாவட்டம், மரக்காணம் வட்டம், எக்கியார் குப்பத்தில் கள்ள்சாராயம் குடித்து உடல்நிலை பாதிப்படைந்த 70 நபர்கள் மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இந்த 70 நபர்களில் 13 நபர்கள் மருத்துவ சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளனர். புதுச்சேரி ஜிப்மர் மற்றும் அரசு மருத்துவமனைகளில் 7 நபர்கள் சிகிச்சை பெற்று வருகிறார்கள். முண்டியம்பாக்கம் அரசு மருத்துவக்கல்லூரி மற்றும் மருத்துவமனையில் 58 நபர்கள் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டு 8 நபர்கள் உயிரிழந்துள்ளனர். தற்பொழுது 50 நபர்கள் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், நேற்று முன்தினம் நேரடியாக வருகை புரிந்து, முண்டியம்பாக்கம் அரசு மருத்துவக்கல்லூரி மற்றும் மருத்துவமனையில் கள்ளச்சாராயம் குடித்து உடல்நிலை பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருபவர்களை பார்வையிட்டு, ஆறுதல் கூறியதுடன், மருத்துவர்களிடம் உடல்நிலை குறித்தும், வழங்கப்படும் மருத்துவ சிகிச்சைகள் குறித்தும் கேட்டறிந்தார்.

மேலும், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, உயர்கல்வித்துறை அமைச்சர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் ஆகியோர் மூலம் நிவாரண உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளது. இதுமட்டுமல்லாமல், பாதிக்கப்பட்டவர்களுக்குத் தேவையான மருத்துவ தேவைகள் மற்றும் மருத்துவ வசதிகள் குறித்து ஆய்வு செய்திடுமாறு அறிவுறுத்தினார்கள். அதனடிப்படையில் இன்றைய தினம் பாதிக்கப்பட்டவர்களை நேரில் பார்வையிட்டு அவர்களுக்கு அளிக்கப்படும் மருத்துவ சிகிச்சைகள் குறித்து கேட்டறியப்பட்டது.

**சிறப்பு மருத்துவக் குழுக்கள்!**

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, திருவண்ணாமலை, ஸ்டான்லி, சேலம் போன்ற பல்வேறு மருத்துவமனைகளிலிருந்து சிறப்பு மருத்துவக் குழுக்கள் வருகை புரிந்து சிகிச்சை அளிக்கும் பணியினை மேற்கொண்டு வருகிறார்கள். 8 நபர்களுக்கு மேல் டாயாலிசிஸ் சிகிச்சை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மீதமுள்ளவர்களுக்கு தேவையான மருத்துவ தேவையினை மருத்துவமனை நிர்வாகம் மேற்கொண்டு வருகிறது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், வருகை புரிந்த போது, பொதுமக்கள் கூடுதல் மருத்துவ வசதிகள் தேவை என கோரிக்கை வைத்துள்ளார்கள். அதனடிப்படையில் முண்டியம்பாக்கம் அரசு மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனைக்கு சென்று தேவையான மருத்துவ வசதி மற்றும் மருத்துவ தேவையினை ஏற்படுத்திக் கொடுத்திடுமாறு அறிவுறுத்தியதன் காரணமாகவும், இரண்டு மருத்துவக்குழுக்கள் நிரந்தரமாக மருத்துவ சிகிச்சை வழங்கிடும் வகையில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன், சிகிச்சை முடிந்து இல்லங்களுக்கு சென்றிடும் வரை சிறப்பான மருத்துவ சிகிச்சை வழங்கப்பட்டு வருகிறது. சிறப்பு மருத்துவ குழுவிற்கு முதன்மை குடிமை மருத்துவர் தலைமையில் 8 மருத்துவர்கள் கொண்ட குழு அமைக்கப்பட்டுள்ளது. அதேபோல், இணை இயக்குநர் தலைமையில், 3 பேர் கொண்ட ஒரு கண்காணிப்புக் குழு ஒன்றும் அமைக்கப்பட்டு அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. சிறப்புக் குழு மற்றும் கண்காணிப்புக்குழுவில் உள்ள 11 மருத்துவர்கள் தொடர்ந்து பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்படும் சிகிச்சைகள் குறித்து ஆய்வு மேற்கொள்வதோடு மட்டுமல்லாமல், தேவையான மருத்துவ தேவைகளை நிறைவேற்றித் தருவதற்கும் உத்தரவிட்டுள்ளார்கள்.

முண்டியம்பாக்கம் அரசு மருத்துவக்கல்லூரி மற்றும் மருத்துவமனையில் போதுமான அளவு மருத்துவ கட்டமைப்பு வசதிகள் உள்ளது. தினந்தோறும் 2700க்கும் மேற்பட்டோர் புறநோயாளிகளாக வருகை தந்து சிகிச்சை பெற்று செல்கின்றனர். உள்நோயாளிகளாக 250க்கும் மேற்பட்டோர் உள்நோயாளிகளா கவும் சிகிச்சை பெற்று செல்கின்றனர். சிறப்பான கட்டமைப்பு வசதி கொண்டு மருத்துவமனை என்பதால் பாதிக்கப்பட்டவர்களை தொடர்ந்து மருத்துவர்கள் கண்காணித்து சிகிச்சை வழங்கி வருகிறார்கள் என மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

உயர்கல்வித்துறை அமைச்சர் தெரிவிக்கையில், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், எக்கியார் குப்பத்தில் ஏற்பட்ட பாதிப்பினை அறிந்தவுடன் உடனடியாக என்னையும், சிறுபான்மை யினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் அவர்களையும் மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருபவர்களை பார்வையிட்டு உடல் நலம் குறித்து கேட்டறிந்திட உத்தரவிட்டார்கள். அதனடிப்படையில், இரண்டு நாட்களாக பாதிகப்பட்டவர்கள் சிகிச்சை பெற்று வரும் அனைத்து மருத்துவமனைகளுக்கும் சென்று அவர்களின் உடல் நலம் குறித்து மருத்துவர்களிடம் கேட்டறிந்ததுடன், சிறப்பு சிகிச்சை வழங்கிடவும் உத்தரவிடப்பட்டது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், நேற்றை தினம் வருகை புரிந்து, சிகிச்சை பெற்று வருபவர்களை நேரில் பார்வையிட்டு ஆறுதல் தெரிவித்ததுடன், அவர்களுக்கு வழங்கப்படும் சிகிச்சைகள் மற்றும் தேவையான மருத்துவ வசதிகள் குறித்து கேட்டறிந்தார்கள். இதுமட்டுமல்லாமல், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களையும் நேரில் சென்று பார்வையிட்டு, தேவையான மருத்துவ வசதிகளை செய்திக்கொடுத்திடுமாறு உத்தரவிட்டதன் காரணமாக, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் வருகை தந்து பாதிக்கப்பட்டவர்களை நேரில் பார்வையிட்டதுடன், மருத்துவர்கள் வழங்கும் சிகிச்சைகள் குறித்தும் கேட்டறிந்தார்கள். மேலும், சிறப்புக்குழு மற்றும் கண்காணிப்புக் குழு ஒன்றினை ஏற்படுத்தி 24 மணிநேரமும் மருத்துவ சேவை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளார்கள்.

கடந்த காலத்தில், 10.09.2001 அன்று சென்னை அம்பத்தூர் அருகே விஷச்சாராயம் குடித்து இறந்தவர்களின் குடும்பத்திற்கு ரூ.25,000/மும், 06.10.2001 அன்று விஷச்சாராயம் அருந்தி உயிரிழந்தவர்களுக்கு ரூ.25,000/மும் வழங்கப்பட்டுள்ளது. 05.12.2018 ஆம் ஆண்டு திண்டுக்கல் மாவட்டம், பள்ளப்பட்டியிலும், காஞ்சிபுரம் மாவட்டத்தில் ஒரத்தி கிராமத்திலும், கடலூர் மாவட்டம் ஆலம்பாக்கத்திலும் கள்ளச் சாராயம் அருந்தி மரணமடைந்துள்ளனர்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், கள்ளச்சாராயம் அருந்தி இறந்தவர்களின் குடும்பம் மற்றும் பிள்ளைகளை காத்திட வேண்டும் என்ற உயர்ந்த நோக்கத்தில் தலா ரூ.10 இலட்சம் வழங்கிட உத்தரவிட்டதுடன், நேரில் சென்று வழங்கிடவும் அறிவுறுத்தினார்கள். அதனடிப்படையிலேயே உயிரிழந்த 13 நபர்களின் இல்லங்களுக்கே சென்று குடும்ப உறுப்பினர்களை நேரில் சந்தித்து நிவாரண உதவித் தொகை வழங்கி ஆறுதல் தெரிவிக்கப்பட்டது என உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி தெரிவித்தார்.

இந்நிகழ்வின்போது, மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் ம.ஜெயச்சந்திரன், முண்டியம்பாக்கம் அரசு மருத்துவக்கல்லூரி மற்றும் மருத்துவமனை முதல்வர் மரு.கீதாஞ்சலி, இணை இயக்குநர் (மருத்துவபணிகள்) மரு.லட்சுமணன் உட்பட பலர் உடனிருந்தனர்.


**GREATER CHENNAI CORPORATION**
**Public Health Department**

H.D.C.NO.NULM-SUH/B2A/0976/2022 **NOTICE INVITING EXPRESSION OF INTEREST**

Applications are invited from eligible NGOs/agencies for running shelters for urban homeless established by Greater Chennai Corporation. The eligible agencies / NGO will be empanelled for running the shelter and allotted according to the availability of vacant shelter and their expertise.

The detailed eligibility criteria and application can be downloaded from the Greater Chennai Corporation website (http://chennaicorporation.gov.in/). The letter for Expression of Interest along with the application (as per format) is to be submitted at the below mentioned venue.

| | |
|---|---|
| Last date of submission of EoI | May 31st 2023 |
| Address for submission of EoI | Office of the City Health Officer, Public Health Department, Amma Maligai, Greater Chennai Corporation |
| Any clarification please contact | City Level Coordinator 044-25303849 |

சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம் சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம் DIPR / 2593 / Tender / 2023 **City Health Officer**

**பெருநகர சென்னை மாநகராட்சி**
**மண்டலம் - 12**

ம.அ.12.ந.க.எண்.இ1/3236/2023 **மின்னணு ஒப்பந்தப்புள்ளி கோரும் அறிக்கை**

கீழ்கண்ட பணிகளுக்கு மின்னணு ஒப்பம் இரண்டு உறை முறையில் கோரப்படுகிறது.

| வ. எண் | பணியின் விவரம் | பணியின் மதிப்பு தோரயமாக 18% GST நீங்கலாக ரூ. | முன் வைப்பு தொகை | பணி செய்ய தகுதியான ஒப்பந்ததாரரின் பதிவு நிலை |
|---|---|---|---|---|
| 1 | ம.அ.12.ந.க.எண்.இ1/3236/2023 மண்டலம் - 12ல் உள்ள 64 பூங்காக்களில் ஆண்டு பராமரிப்பு பணி (மேற்பார்வையாளர் செலவினம் உட்பட) (3 ஒப்பங்கள்) | குறைந்தபட்ச பணியின் மதிப்பு ரூ.67.02 இலட்சம் முதல் அதிகபட்ச மதிப்பு ரூ.208.83 இலட்சங்கள் | பணியின் மதிப்பில் 1 சதவீதம் | முதல் வகுப்பு / இரண்டாம் வகுப்பு |

ஒப்பப் படிவம் சமர்ப்பிக்க கடைசி நாள் மற்றும் நேரம் : 25.05.2023 மாலை 3.00 மணி
ஒப்பப் படிவங்கள் http://tntenders.gov.in என்ற இணையதளம் மூலம் தெரிந்துக்கொள்ளலாம்.
இணையதளம் மூலம் திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் : 26.05.2023 மாலை 3.30 மணி

செ.ம.தொ.இ / 2594 / ஒப்பந்தப்புள்ளி / 2023
சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம் சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம் **மண்டல அலுவலர் / ம - 12**





கடலூர் மேற்கு மாவட்டம் விருத்தாச்சலம் தெற்கு ஒன்றியம் தி.மு.க. மற்றும் இளைஞர் அணி சார்பில் கருவேப்பிலங்குறிச்சி திராவிட மாடல் ஆட்சியின் இரண்டு ஆண்டு சாதனை விளக்க பொதுக்கூட்டம் ஒன்றியச் செயலாளர் தி.வேல்முருகன் தலைமையில் நடைபெற்றது. தி.மு.க. தலைமைக் கழகப் பேச்சாளரும் எழுத்தாளருமான கு.வாஞ்சிநாதன் தமிழக அரசின் இரண்டு ஆண்டு சாதனைகளை குறித்து குறித்து விளக்கி பேசினார். பாரி முகமது இப்ராஹிம், முத்துவேல், பச்சமுத்து, மலர் முருகன், பாத்திரக்கடை சி.செல்வம், ஞானமணி, முகமது யூசப் சம்சாத் பேகம், செல்வம், அறிவுடைநம்பி, வளர்மதி,பி.எஸ். நடராஜன், மு.பாலு ஆகியோர் கலந்து கொண்டனர்.



திராவிட மாடல் அரசின் இரண்டு ஆண்டு சாதனைகளை விளக்கும் பொதுக்கூட்டம் பொள்ளாச்சி நகர கழகத்தின் சார்பாக நகர கழகச் செயலாளர் இரா. நவநீதகிருஷ்ணன் தலைமையில் ச.தர்மராஜ் வரவேற்புரையில் இரும்பு சுப்பிரமணியம், பாத்திமா அக்பர், ஆகி மூர்த்தி, ஸ்வீட் நாகராஜ், வடிவேல் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. கோவை தெற்கு மாவட்டக் கழக செயலாளர் தளபதி முருகேசன், கழக செய்தித்தொடர்பு துணைச் செயலாளர் கோவை செல்வராஜ் சிறப்புரையாற்றினர். நிகழ்ச்சியில் தலைமைச் செயற்குழு உறுப்பினர் மு.க.முத்து, தலைமைப் பொதுக்குழு உறுப்பினர் ஜெயக்குமார், வழக்குரைஞர் மருதராஜ், கோ.சி மணி, சு.தங்கவேல், கே.வி.ஆறுமுகம், சிவானந்தம், ஆறுமுகசாமி, சு.பட்டீஸ்வரன், சா.குட்டப்பன், பட்டாள மணிகண்டன், ஷானவாஸ், கராத்தே ராஜா, முபாரக், விவேக், ராஜ்குமார், ஆட்டோ நாகராஜ், உதயகுமார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### ஏ. கோவிந்தசாமி
**மே 18 (1969)**



மொழிப்போராட்டத்தில் கலந்து கொண்டு சிறை சென்றவர். 1952ல் தி.மு.க. ஆதரவோடு போட்டியிட்டு விக்கிரவாண்டி தொகுதி சட்டமன்ற உறுப்பினரானார்.

கழகம் நடத்திய மும்முனைப் போராட்டத்தில் முன்னணித் தலைவர்கள் அனைவரும் கைதாகி சிறை சென்றபோது, அண்ணா அவர்களால் கழக பொறுப்பாளராக நியமனம் செய்யப்பட்டவர்.

தி.மு.க. தொழிற்சங்கச் செயலாளராகப் பணியாற்றியவர்.

அண்ணா அவர்களின் நம்பிக்கைக்கு உரியவரானார். தலைவர் கலைஞரின் உற்ற நண்பராக விளங்கியவர்.

1967ல் அண்ணா அமைச்சரவையிலும், அண்ணா மறைவுக்குப் பிறகு தலைவர் கலைஞர் அமைச்சரவையிலும் பணியாற்றியவர்.

"கொள்கை குன்றம் கோவிந்தசாமி" என தலைவர் கலைஞர் அவர்களால் பாராட்டப்பட்டவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### இரா. செங்குட்டுவன்
**மே 18 (2021)**



இளமைப் பருவத்திலேயே கழகக் கொள்கையில் ஈடுபாடு கொண்டு பணியாற்ற தொடங்கியவர்.

காஞ்சிபுரம் மாவட்டத்தில் கிளைச் செயலாளராகவும், சித்தாமூர் தெற்கு ஒன்றிய பொறுப்பாளராகவும், மாவட்ட கலை,இலக்கிய பகுத்தறிவு பேரவை துணை அமைப்பாளராகவும் பொறுப்பு வகித்தவர்.

கொளத்தூர் ஊராட்சி மன்றத் தலைவராகவும், சித்தாமூர் ஒன்றியக்குழு உறுப்பினராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டு பணியாற்றி அப்பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.

இந்தி திணிப்பு எதிர்ப்பு போராட்டம், ஈழத்தமிழர் ஆதரவு போராட்டம் என பல்வேறு போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**